செ.கு.எண் : 018 நாள் :27.04.2023

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் இன்று (27.04.2023) தலைமைச் செயலகத்தில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கும் மண்எண்ணெய் மற்றும் கோதுமை ஒதுக்கீட்டு அளவினைக் குறைத்தது தொடர்பாக செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால், ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மாதம் ஒன்றிற்கு 59,852 கிலோ லிட்டராக இருந்தது. இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 01.4.2021 முதல் மாதம் ஒன்றிற்கு 7536 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீண்டும் 01.4.2022 முதல் அதுவும் குறைக்கப்பட்டு மாதம் ஒன்றிற்கு 4520 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 01.4.2023 முதல் அதுவும் குறைக்கப்பட்டு தற்போது மாதம் ஒன்றிற்கு 2712 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியதற்கு தமிழ்நாட்டில் எரிவாயு இணைப்பு அதிகமாக இருப்பதால் ஒதுக்கீடு குறைக்கப்படுவதாக ஒன்றிய அரசின் மாண்புமிகு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு இணை அமைச்சர் திரு. இராமேஸ்வர் தேலி அவர்கள் பதில் கடிதம் எழுதியிருந்தார். மீண்டும் 29.03.2023 அன்று ஒன்றிய அரசின் மாண்புமிகு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளேன். அதற்குப் பதில் எதிர்நோக்கப்படுகிறது.

1996 – 2001 கழக ஆட்சியின் போது எரிவாயு இணைப்பு வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன்கள் வழங்கப்பட்டு மகளிர் பலர் பயன் அடைந்தனர். எரிவாயுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களின் கடன்களை

மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 – 11 கழக ஆட்சியில் 29 இலட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புகள் விலையில்லாமல் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் சொந்த நிதியிலிருந்து எரிவாயு இணைப்புகள் வழங்கியதால் அதிக எரிவாயு இணைப்புகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதைக் காண்பித்து, தமிழ்நாட்டை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக மண்எண்ணெய் ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு குறைத்துள்ளது வருத்தமளிக்கிறது.

மண்எண்ணெய்க்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானியம் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்றாலும் ஒதுக்கீடு செய்வது ஒன்றிய அரசாக இருப்பதால் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த ஒன்றிய அரசிடம்தான் கோரிக்கை வைக்க இயலும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று புதுதில்லி சென்று ஒன்றிய அமைச்சரை நேரில் சந்தித்து தமிழ்நாட்டிற்கான மண்எண்ணெய் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த கோரிக்கை வைக்கப்படும்.

அதேபோன்று தமிழ்நாட்டிற்கான ஒன்றிய அரசின் கோதுமை ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஜூலை 2020 வரை மாதம்தோறும் 13,485 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. இது உயர்த்தப்பட்டு ஆகஸ்ட் 2020 முதல் மே 2022 வரை மாதம் 30,647 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் ஜுன் 2022 முதல் தமிழ்நாட்டிற்கான கோதுமையின் ஒதுக்கீடு வெகுவாகக் குறைக்கப்பட்டு தற்போது மாதம் ஒன்றிற்கு 8532 மெ.டன் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதை உயர்த்தி 23,532 மெட்ரிக் டன் வழங்கிட ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

சென்னையில் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டுக் குறைவால் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டிற்கு நமது சிவில் சப்ளைஸ் ஆணையர் அவர்கள் காலையில் நேரடியாகச் சென்று கேட்டபோது அவர்கள் சொல்கிறார்கள், "கேஸ் ஏஜென்சிக்குச் சென்று பணம் கட்டி சிலிண்டர் வாங்கக்கூடிய வசதிவாய்ப்பு எனக்கு இல்லை, மண்ணெண்ணெய் 2 லிட்டர் அல்லது 3 லிட்டர் கொடுத்தால் பரவாயில்லை" என்று சொல்லுகின்ற நிலைமைக்கு இன்றைக்கு வறுமை கோட்டிற்குக் கீழே அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் ஒன்றிய அரசு அதையெல்லாம் பார்க்காமல் இன்றைக்கு தமிழகத்தில் 30 லட்சம் பேருக்கு மேல் எரிவாயு இணைப்பு இல்லை என்ற நிலையிலும் இந்த ஒதுக்கீட்டைக் குறைத்திருப்பது மிகவும் வருத்தம் தரக்கூடிய செய்தியாகும். மலைப்பகுதிகளில் அதிகம் பேர் மண்ணெண்ணெய் வைத்துதான் வாழ்க்கை நடத்துகிறார்கள். அதே மாதிரி கடந்த காலத்தில் எல்லாம் மாநகராட்சிக்கு இவ்வளவு ஒதுக்கீடு, நகராட்சிக்கு, பேரூராட்சிக்கு கொடைக்கானல், ஏற்காடு மலை, ஊட்டி போன்ற பகுதிகளுக்கெல்லாம் இவ்வளவு இவ்வளவு ஒதுக்கீடு என்று ஏற்கனவே ஒதுக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த ஒதுக்கீடெல்லாம் செய்ய முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். மண்ணெண்ணெய் ஒதுக்கீடு என்பது ஒன்றிய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக அன்றைக்கு இருந்த கலைஞர் அவர்கள் 2007ஆம் ஆண்டு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைக்

கொண்டுவந்து அரிசியோடு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், ஆட்டா மாவு, மைதா ரவை ஐந்து வகையான பொருள்களைப் பொதுச் சந்தையில் விலைக்கு வாங்கி குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் வழங்கிய பெருமை தலைவர் கலைஞருடைய ஆட்சிக்காலத்தைச் சாரும். ஆனால் 2011 ல் ஆட்சிக்கு வந்த கடந்த ஆட்சியாளர்கள், அந்த உளுந்தம் பருப்பையும், ஆட்டா மாவையும் குறைத்து விட்டார்கள். ஆனால் இன்றைக்குப் பொருளாதார நெருக்கடி இருந்தாலும், நிதி சுமை இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுடைய நலன் கருதி பொது விநியோகத் திட்டத்தில் இன்றைக்கு துவரம்பருப்பு, பாமாயில், சர்க்கரை போன்ற பொருட்களையெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மண்ணெண்ணெய் தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்திருந்தால் பருப்பு, ஆயில், இப்போது சர்க்கரை எல்லாம் நாங்கள் வாங்குவது போன்று, வாங்கி பொதுமக்களுக்கு எத்தனை லிட்டர் தேவையோ அத்தனை லிட்டர் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு அனுமதி வழங்கினால்தான் மண்ணெண்ணெயைக் கொடுக்க முடியும். ஏனென்றால் பெட்ரோலாக இருந்தாலும் சரி, டீசலாக இருந்தாலும் சரி, மண்ணெண்ணெயாக இருந்தாலும் சரி, எரிவாயு இணைப்பாக இருந்தாலும் சரி ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால், இன்றைக்குப் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு விலை இல்லாமல் 30 லட்சம் பேருக்கு 2006–2011–ல் எரிவாயு இணைப்பை கொடுத்த காரணத்தால் தான், இன்றைக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் இதே சமயத்தில் மற்ற மாநிலங்களிலெல்லாம்

அவர்கள் எரிவாயு இணைப்பைக் கொடுக்கவில்லை. கொடுக்காத மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் எல்லாம் கூடுதலாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் இன்றைக்கு வஞ்சிக்கப்பட்டிருக்கிறது, குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சருடைய அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த துறையின் சார்பாக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நெல்மணி கூட மழையில் நனையக் கூடாது. நெல் வாங்கினால் உடனே அரைத்து அதை பொதுமக்களுக்குத் தரமான அரிசியாக கொடுக்க வேண்டும் என்று கூறியதால் 376 அரவை ஆலைகள் இருந்ததை, இப்பொழுது 745 அரவை ஆலைகளாக நாங்கள் உயர்த்தியிருக்கிறோம். அனைத்து ஆலைகளிலும் கருப்பு பழுப்பு இல்லாத அரிசியாக கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த அரிசியும், பாமாயில் ஆக இருந்தாலும் சரி, பருப்பாக இருந்தாலும், சர்க்கரையாக இருந்தாலும், சிவில் சப்ளை கிடங்கிற்கு வரும்போது அதை கண்காணிக்கும் அதிகாரியாக மாவட்ட வழங்கல் அலுவலர், தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் RM. SRM, தரக்கட்டுப்பாட்டு அதிகாரி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் நான்கு பேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டு, பொருட்கள் அரவை ஆலையில் இருந்து வந்தாலும் சரி, வேறு எங்கிருந்து வந்தாலும் சரி, வியாபாரிகளிடத்திலிருந்து வந்தாலும் தரமான பொருட்களைத் தான் வாங்க வேண்டும் மற்ற பொருட்களை வாங்கக் கூடாது. அப்படியில்லை என்றால், அதை திருப்பியனுப்ப வேண்டும் என்று முடிவு செய்து பொதுமக்களுக்குத் தரமான பொருள்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

கழக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு 2020-2021-ல் 45 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. 2021-2022-ல் 43 லட்சம், இந்த ஆண்டு இதுவரை 35,50,000 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக வருகின்ற செப்டம்பர் மாதம் முடிவதற்குள்ளாக 45 லட்சம் மெட்ரிக் டன், 50 ஆண்டுகாலத்தில் இதுவரை இவ்வளவு நெல் கொள்முதல் செய்ததாக சரித்திரமில்லை. அந்த சாதனையை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் அரசு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வேலை பார்க்கின்ற தொழிலாளர் பெருமக்களுக்கு சம்பள உயர்வு வழங்கியிருக்கிறோம். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு தலைவர் கலைஞருடைய ஆட்சிக்காலத்திலே தொடங்கப்பட்டது. இது 2022 இன்றைய முதலமைச்சருடைய ஆட்சிக்காலத்தில் பொன்விழா கண்டிருக்கிறது. அதில் வேலை பார்க்கின்ற 12,177 பேருக்கு ஊக்கத் தொகையாக தலா 1500 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி அதில் வேலை பார்த்து இறந்தவர்களின் வாரிசுகள் 109 பேர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அங்கு நீண்ட காலமாக தற்காலிகமா வேலை பார்த்து வந்த 591 பேர்களைப் பணி நிரந்தரம் செய்திருக்கிறோம். இப்படி எண்ணற்ற சாதனைகளை இத்துறை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** ரேஷன் கடையில் தற்பொழுது மண்ணெண்ணெயும் கோதுமையும் கேட்கின்ற அளவிற்கு கிடைக்காது. குறிப்பாக, மலை கிராமங்களில் உள்ள சூழ்நிலைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

**பதில்:** அதிகம் பேர் எரிவாயு இணைப்பு பயன்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடு என்றும் அதனால் குறைக்கிறோம் என்ற காரணத்தைச் சொல்கிறார்கள்.

இப்போது 30 லட்சம் பேர் எரிவாயு இல்லாமல்தான் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 3 லிட்டர் கணக்கிட்டாலும், 9000 KL வருகிறது. இப்போது 2712 KL தான் கொடுக்கிறார்கள். ஒன்றிய அரசு நம்மை வஞ்சிப்பதாகத்தான் நினைக்க வேண்டும்.

**கேள்வி:** அந்த 30 லட்சம் பேரை எரிவாயு இணைப்பாக மாற்ற முடியாதா?

**பதில்:** அவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அவர்களுக்கு சிலிண்டர் வாங்குவதற்குப் பணம் வேண்டும்.

**கேள்வி:** இதுகுறித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கலாமே?

**பதில்:** ஏற்கனவே இரண்டுமுறை கடிதம் எழுதினோம், அதற்குப் பதில் இல்லை. இன்றைய முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயத்தில், தமிழ்நாட்டினுடைய உரிமைகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் பிரதம மந்திரிக்கு கடிதம் எழுதியிருக்கிறார், கோரிக்கை வைத்திருக்கிறார், நேரடியாகச் செல்லும்போதும் தமிழ்நாட்டிற்கு என்னென்ன வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிவிட்டு வந்திருக்கிறார். நேற்றைக்கு டெல்லி சென்ற எதிர்க்கட்சித்தலைவர் இதைப்பற்றிக் கேட்டிருக்கலாம். மண்ணெண்ணெய் பற்றி மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு வேண்டிய பல்வேறு திட்டங்களை பற்றிப் பேசிவிட்டு வந்திருந்தால் நன்றாக இருக்கும். எதற்குப் போனார்கள் எதற்கு வந்தார்கள் என்பது பத்திரிகையாளர்களுக்குத் தெரியும்.அதையெல்லாம் உங்கள் ஊகத்திற்கே விட்டு விடுகிறேன். தமிழ்நாட்டினுடைய நலன் கருதி, மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைக்கப்பட்டு இருக்கிறது மண்ணெண்ணெய் கொடுங்கள், கோதுமை குறைக்கப்பட்டிருக்கிறது, அதைக் கொடுங்கள் என்று சொல்லியிருந்தால் சந்தோஷப்படலாம்.

**கேள்வி:** துறை அதிகாரிகள் நேரில் சென்று சந்திப்பது ...

**பதில்:** முதலமைச்சரிடம் கலந்துபேசி, நானும் துறைச் செயலாளரும் டெல்லி சென்று பார்க்கலாம்.

**கேள்வி:** இங்கு இருக்கும் மத்திய அரசு நிறுவனம் Food Corporation of India இருக்கிறதே?

**பதில்:** மண்எண்ணெய்க்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**கேள்வி:** Food Corporation of India–க்கு நம் நிலைமை தெரியும், அவர்கள் நமது நிலையை சொல்ல மாட்டார்களா?

**பதில்:** கோதுமை பற்றி சொல்லிவிட்டோம். அதனால்தான் கோதுமை 15000 மெட்ரிக் டன் வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதாவது மண்ணெண்ணெய்யும் குறைத்திருக்கிறார்கள், கோதுமையையும் குறைத்திருக்கிறார்கள்.

**கேள்வி:** ஒரே நாடு ஒரே ரேஷன் என்ற திட்டத்திற்கான பங்கீடுகள் சரியாக வருகிறதா?

**பதில்:** அது எல்லாம் சரியாக இருக்கிறது.

**கேள்வி:** மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடு குறையும்போது, ஒரே நாடு ஒரே ரேஷன் பொருட்கள் சரியாக வருகிறது என்கிறீர்களே?

**பதில்:** வட இந்தியர்கள் அதிகம்பேர் கோதுமை தான் கேட்பார்கள். இதைக் குறைக்கிறபோது, இதையெல்லாம் வலியுறுத்தித்தான் 15 ஆயிரம் மெட்ரிக் டன் நாங்களே விலைக்கு வாங்கலாம் என்று முடிவு செய்துவிட்டோம். அதற்கு ஒன்றிய அரசு அனுமதி கொடுக்க வேண்டும்.

**கேள்வி:** அதற்கு ஏதாவது கடிதம் எழுதி இருக்கிறீர்களா?

**பதில்:** ஆமாம்

**கேள்வி:** பரிசோதனை அடிப்படையில் இரண்டு மாவட்டங்களில் கேழ்வரகு கொடுப்பதாக சொல்லி இருக்கிறீர்கள், இந்த மாதம் தொடங்கிவிடுமா?

**பதில்:** தர்மபுரி மற்றும் நீலகிரியில் மே மாதம் தொடங்கப் போகிறோம்.

**கேள்வி:** தர்மபுரியில் கேழ்வரகு கொள்முதல் செய்யும் பொழுது சிக்கல் இருக்கிறதா? **பதில்:** அவர்கள் முதலில் வியாபாரிக்கு 17 ரூபாய்க்குத் தான் விற்றுக் கொண்டிருந்தார்கள், ஆனால் நாம் வாங்குவது ரூ.35.78. அதனால் வியாபாரிகளும் 26, 28 ரூபாய்க்கு வந்துவிட்டார்கள். இருந்தாலும் தருமபுரி, கிருஷ்ணகிரியில் நமக்குப் போதுமான கேழ்வரகு கிடைக்கவில்லை. இப்போது Food Corporation of India மூலமாக கர்நாடகாவிலிருந்து நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் அடுத்த மாதம் தொடங்கி வைக்கப் போகிறோம். அந்த அட்டைதாரர்களுக்கு அரிசிக்கு 20 கிலோ கொடுக்கிறோமென்றால், அரிசியை 2 கிலோ குறைத்து அதற்குப் பதிலாக ராகி 2 கிலோ கொடுக்கப்படும்.

**கேள்வி:** ரேஷன் அரிசி பாக்கெட் விநியோகத் திட்டம் பற்றி ...

**பதில்:** சட்டமன்றத்தில் கூட அறிவித்தேன். ஆறு மாவட்டங்களில் திருவாரூரில் இரண்டு 500 மெட்ரிக் டன், தஞ்சாவூரில் இரண்டு 500 மெட்ரிக் டன் தனியார் பங்களிப்புடன். அதேபோல கடலூரில் ஒரு 500 மெட்ரிக் டன், தேனியில் 200 மெட்ரிக் டன், மொத்தம் 2700 மெட்ரிக் டன் தினந்தோறும் அரைக்கின்ற அரிசி நவீன ஆலைகள் போடப் போகிறோம். 25 கிலோ பாக்கெட்டுக்கு இப்போது ஜிஎஸ்டி போடுகிறார்கள். அதனால் தான் அன்றைக்கு நான் சட்டமன்றத்தில் பேசுகிற போது சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி, இது பொது விநியோகத் திட்டம், விலைக்கு விற்கும் பொருள் கிடையாது, அதனால் ஜிஎஸ்டி போடமாட்டோம் என்று அங்கு அனுமதி கொடுக்கின்ற நேரத்தில் அரிசி, பருப்பு, சர்க்கரை எல்லாமே பாக்கெட் போட்டு கொடுக்கலாம் என்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**கேள்வி**: கடிதம் எழுதுகிறோம், அவர்களிடமிருந்து பதில் வரவில்லை அடுத்த கட்டமாக தமிழ்நாடு அரசு என்ன செய்யும்?

**பதில்**: மண்ணெண்ணெய் குறித்து ஒன்றிய அரசைக் கேட்டுப் பார்ப்போம்.

**கேள்வி:** ஏற்கனவே இரண்டு முறை கடிதம் எழுதி இருக்கிறீர்கள்…

**பதில்:** அதனால்தான் முதலமைச்சரிடம் கலந்து பேசிவிட்டு, முதலமைச்சரின் அனுமதி பெற்று நேரடியாக போகலாம் என்று முடிவு செய்து இருக்கிறோம்

**கேள்வி**: மற்ற மாநிலங்களில் இதுபோல் இருக்கிறதா?

**பதில்:** மற்ற மாநிலங்களில் எல்லாம் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் சிலிண்டர் அதிகமாக வாங்கி விட்டார்கள் என்பதால் குறைக்கிறார்கள். மொத்தத்தில் இரண்டு கோடியே 21 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதில் முப்பது லட்சம் பேர் தான் சிலிண்டர் வாங்காமல் இருக்கிறார்கள், மற்ற எல்லோரும் வாங்கி விட்டார்கள், அதனால் மண்எண்ணெய் ஒதுக்கீட்டை வைத்து தான் குறைக்கிறார்கள்.

**கேள்வி:** பிற மாவட்டங்களுக்குச் சிறுதானியம் கொடுக்கிறீர்களா?

**பதில்:** முதல் இரண்டு மாவட்டங்களுக்குச் சோதனை முறையில் கொடுக்கிறோம். படிப்படியாக மற்று மாவட்டங்களுக்கும் கொடுக்க ஆரம்பிப்போம்.

**கேள்வி:** சிறுதானிய ஆண்டாக அறிவித்திருக்கிறார்கள் மற்ற கம்பு போன்ற சிறுதானியங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதா?

**பதில்:** அந்த அளவுக்கு வரவு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும், உற்பத்தி இருக்கிறதா என்று பார்த்து தான் செய்ய முடியும். இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை சிறுதானிய ஆண்டாக அறிவித்ததால் நம்முடைய துறையின் சார்பாக எல்லா மாவட்டங்களிலும் சிறுதானிய உணவுத் திருவிழா நடத்தப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறோம்.

**கேள்வி:** சிறுதானியத்திற்கு மத்திய அரசு முன்னெடுப்பு எடுத்து இருக்கிறதா?

**பதில்:** பிரதம மந்திரியே அறிவித்திருக்கிறார்.

**கேள்வி**: சிறுதானியத்திற்கு ஏதாவது மானியம் இருக்கிறதா?

**பதில்**: அரிசி இப்பொழுது 20 கிலோ கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பதிலாக இரண்டு கிலோ குறைத்துக் கொண்டு ராகியைக் கொடுக்கிறோம். அரிசிக்கு மானியம் வழங்கப்படுகிறது, அதுபோல ராகிக்கும் மானியம் உண்டு.

----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in